# கரும்பு

இறுவட்டு இலவசம்

சிறுவர் பாடல்

தரம் 1 தொடக்கம் 5 வரை




ஆசிரியர்: திருமதி செ.தெய்வேந்திரமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூலின் பெயர் : "கரும்பு" சிறுவர் பாடல்

நூலாசிரியர் : திருமதி. செ.தெய்வேந்திரமூர்த்தி

பதிப்புரிமை : நூலாசிரியர்

வெளியீடு : நூலாசிரியர்

பெறுமதி : 300/=

விலை : 250/=

அளவு : A4

தாள் : Ad Paper

பக்கங்கள் : 32

தொலைபேசி இல : 077 649 0638

அச்சுப் பதிப்பு : வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



"கரும்பு" எனும் இனிமைமிக்க சிறுவர் பாடல்களை உள்ளடக்கிய இந்நூல் கிளி/ முருகானந்தா கல்லூரி ஆசிரியை திருமதி செல்வநாயகி தெய்வேந்திரமூர்த்தி என்பவரின் முயற்சியில் வெளியிடப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மாணவச் சிறார்களுக்கு மன மகிழ்ச்சியையும் நல்லொழுக்கத்தையும் பெற்றுத் தரும் வகையில் எழுதப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சம் ஆகும்.

ஆசிரியரின் இச் சிறந்த நல் நோக்கமானது நிறைவேறவும், இந்நூலை அனைத்து மாணவச் சிறார்களும் கற்றுப் பயன்பெறவும் எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டி வணங்கி எனது நல்லாசிகளை வழாங்குகின்றேன்.

**இரகுநாதக்குருக்கள் வாசவசர்மன்**
பிரதமகுரு
ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயம்
முரசுமோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ பாராளுமன்ற உறுப்பினரின்

# வாழ்த்துச் செய்தி



## "சிறார்களின் எண்ணங்களில் வண்ணமாகும் நூல் வெளியீடு சிறக்கட்டும்"

ஒரு சமூகத்தைச் சார்ந்த மனிதர்களின் ஆளுமைகளை அடையாளப்படுத்துவதில் அவர்தம் படைப்புக்களுக்கு காத்திரமான பங்குண்டு. அந்தவகையில் இற்றைக்கு மூன்று தசாப்த காலமாக ஆசிரியப் பணிக்கென்றே தன்னை அர்ப்பணித்து, அப்பணியின் அடையாளமாகத் திகழ்கின்ற ஆசிரியை திருமதி.செல்வநாயகி தெய்வேந்திரமூர்த்தி அவர்கள் சிறுவர்களுக்கான பாடல்கள் அடங்கிய நூல் ஒன்றை வெளியிடுவதையிட்டும், அந்நூலுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டும் பேருவகை அடைகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் முரசுமோட்டை மண்ணைத் தன் பூர்வீகமாகக் கொண்ட திருமதி. செல்வநாயகி தெய்வேந்திரமூர்த்தி அவர்கள் ஒரு பயிலுநர் ஆசிரியராக 1990 ஆம் ஆண்டு தனது கல்விப் பணியை ஆரம்பித்து கிளி/புனித அந்தோனியார் றோ.க.வித்தியாலயம், மு/முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம், கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம், வ/வவுனியா இ.தி.த.க பாடசாலை, கிளி/முருகானந்தாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் சித்திரபாட ஆசிரியராக சரியாக முப்பது ஆண்டுகள் கனதிமிக்க கல்விப்பணியை ஆற்றிவருகின்ற அதேவேளை எனது தனிப்பட்ட வாழ்வில் ஒரு சகோதரியாக, சக ஆசிரியராக மட்டுமன்றி என் உயர்வு கண்டு மகிழும் ஓர் நலன் விரும்பியாக இருந்து வருவதையும் இந்த இடத்தில் பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

கல்விப்புலத்தில் மிக நீண்ட காலங்கள் கருத்தொன்றி சேவையாற்றி மூன்று தசாப்தங்களுக்கு மேலாய் கல்வியில், கலைகளில், ஒழுக்கத்தில் உயர்ந்த பல்லாயிரம் மாணவர்களை உருவாக்கிய பெருமைக்-குரிய ஒரு ஆசிரியராக மட்டுமன்றி, தனது மாணவர்களின் எதிர்காலம், ஒழுக்கம், மனப்பாங்கு, செயற்திறம், சமூக விழுமியம் போன்றவற்றில் நீண்ட கண்காணிப்பை பேணி வருபவராக இருந்துள்ளதாலேயே அவரது எண்ணத்தில் சிறுவர்களுக்கான ஒழுக்க விழுமியங்களைப் போதிக்கின்ற "கரும்பு" என்னும் சிறுவர் பாடல்கள் கொண்ட நூல் உருப்பெற்றிருக்கின்றது.

மாணவர்களின் கல்வி மீதான பார்வையையும், கற்றல் மீதான ஆர்வத்தையும் சிதைத்து அவர்களை திசை திருப்புவதற்கான ஏதுநிலைகள் அதிகரித்துள்ள இன்றைய காலச்சூழலில் சிறுவர்களை சிறுவர் களாக நோக்கி அவர்தம் வயதுக்கும், மனதுக்கும் ஏற்ப எளிதில் பதியக்கூடியவாறான சிறுவர் பாடலாக்கத் தொகுதி ஒன்றை வெளியிட முனைந்த இவ் ஆசிரியையின் எண்ணமும், செயலும் பாராட்டுக்குரியதே!

இந்த மண்ணின் மாணவர்களை ஒழுக்கநெறி பிறழாத, மரபும், பண்பாடும் தெரிந்த, அவற்றைக் கட்டிக் காக்க துணிந்த மனிதர்களாக செதுக்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கோடு நூலுருப் பெற்றுள்ள "கரும்பு" சிறுவர் பாடல் நூல் வெளியீடு சிறப்புறவும், ஆசிரியை திருமதி.செல்வநாயகி தெய்வேந்திரமூர்த்தி அவர்கள் தனது எண்ணங்களை தொடர்ந்தும் படைப்புக்களாக்கி பல்வேறு நூல்களை வெளியிடவும் எல்லாம் வல்ல இறைவனின் அருள் வேண்டி, வாழ்த்தி நிற்கிறேன்.

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்.மாவட்டம்

06.02.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயக் கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி



திருமதி செ.தெய்வேந்திரமூர்த்தி ஆசிரியர் முருகானந்தா கல்லூரி அவர்களின் சிறுவர் பாடல் நூல் ஆக்கத்திற்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சிறுவர் இலக்கியங்களை இன்றைய காலகட்டத்தில் வளர்த் தெடுக்கப்பட வேண்டியது கட்டாயமானதாகும். பொழுது போக்கு சாதனங்களின் தாக்கத்தினால் பெற்றோரும், சிறார்களும் தமிழ்மொழி, பண்பாட்டு கலாசாரத்தில் இருந்து விலகி நிற்கின் றனர். மொழிவளம், ஆற்றல் என்பன அபிவிருத்தியடைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

சிறுவர் இலக்கியத்தினூடாக இவ்ஆசிரியர் தற்காலத்திற்கு ஏற்றாற்போல் நடைமுறைவாழ்வியல் பண்பாட்டம்சங்களையும் விழுமியங்களையும் இந்நூலில் உள்ளடக்கியிருப்பது சிறப்பம்சமாகும்.

செய்யக்கூடாத செயல்கள், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, இயற்கையை நேசித்தல், பெரியோரைக் கனம்பண்ணல் போன்ற அரிய பண்புகளை பாடல் மூலமாக அழகாகப் புனைந்துள்ளார்.

இவ்ஆசிரியரின் இலக்கிய சேவை, சமூகமாற்றத்திற்கான அக்கறை தொடர வேண்டும் என வாழ்த்துவதோடு பாடல்கள் எதிர்காலத்தில் காணொளி வடிவில் பரிணாம வளர்ச்சி பெறவேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

**கி.கமலராஜன்**
*வலயக்கல்விப் பணிப்பாளர்*
*கிளிநொச்சி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளி / முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி ஆசிரியர் திருமதி. செ.தெய்வேந்திரமூர்த்தி அவர்கள் சிறந்த சித்திரப்பாட ஆசிரியராவார். தனது சிறந்த ஆளுமை மற்றும் தான் பெற்ற சிறந்த அனுபவங்களினூடாக மாணவர்களைச் சிறப்பான முறையில் வழிப்படுத்திச் செயன்முறை மற்றும் அறிமுறை விடயங்களைச் சிறந்த முறையில் கற்பிப்பவர். க.பொ.த (சா/த) பரீட்சையில் தோற்றிய மாணவர் ஒருவர் எட்டுப் பாடங்களில் சித்தியடைய தவறியபோதும் சித்திர பாடத்தில் திறமைச் சித்தி (C) பெற்றுக் கொண்டமை இவரின் சிறந்த கற்பித்தலுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது.

திருமதி. செ.தெய்வேந்திரமூர்த்தி ஆசிரியர் அவர்களிடமிருந்த மற்றுமோர் ஆற்றல் பாடல்களாக்கும் திறனாகும். பல சிறந்த சிறுவர் பாடல்களை ஆக்கிப் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டவர். சிறுவர்களுக்கு ஒழுக்க விழுமியப் பண்புகளை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் சிறுவர்கள் இசையுடன் பாடக்கூடிய வகையில் பாடல்களை ஆக்கியுள்ளார். தான் இயற்றிய பாடல்களைத் தொகுத்துக் 'கரும்பு' எனும் சிறுவர் பாடல்களமைந்த நூலினை வெளியிடுவது சிறப்பான விடயமாகும்

இவரது பணி சிறக்கப் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். இவரது 'கரும்பு' சிறுவர் பாடல் நூல் வெளியீடு சிறப்பாக அமைய எல்லாம் வல்ல துண்டிப் பிள்ளையாரின் ஆசிவேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.சி.சிவசிவா**
உதவிக்கல்விப் பணிப்பாளர்
அழகியல்
மாகாண கல்வித் திணைக்களம்,
வடக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது பழமொழி இளமைக் காலத்தில் நாம் கற்றுக் கொள்ளும் எந்த ஒரு பழக்கமும் எம் மனதில் ஆழ வேரூன்றி விடுகின்றது.

அற நெறிகளும், விழுமியங்களும், அகன்ற மனப்பாங்கும் குறைவடைந்து வரும் இக்கால கட்டத்தில் அவற்றை மீண்டும் கட்டி-யெழுப்ப வேண்டிய தேவை பெரியவர்களான நம் ஒவ்வொரு வருக்கும் உண்டு. இச் சமூக தேவையைப் புரிந்து கொண்ட கிளி/முருகானந்தாக் கல்லூரி ஆசிரியை திருமதி செல்வநாயகி தெய்வேந்திரமூர்த்தி இசையுடன் கூடிய சிறுவர்பாடல்களை கண்ணுக்கினிய கருத்தோவியங்களுடன் ஒரு சிறுவர் பாடல் மலராக வெளியிடுவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பாலர்களுக்கும் பெருவிருந்தாக அமையும் என எண்ணுகிறேன். ஓய்வுபெற இருக்கும் இவ்வாசிரியரின் சமூக இலக்கியப்பணி தொடர எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு.ஆ.உதயணன்**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
கண்டாவளைக் கல்விக் கோட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" நற்பண்புகளைக் குழந்தைப்பருவம் முதலே பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்த வேண்டும். கல்வியுடன் இணைந்து விழுமியப்பண்புகளும் புகட்டப்பட வேண்டும். எமது உயரிய பண்புகளையும் வழக்கங்களையும் அடுத்த சந்ததிக்கு கடத்த வேண்டிய மாபெரும் பணி எம் ஒவ்வொருவருக்கும் உண்டு. இதனை நன்குணர்ந்த எமது கல்லூரி ஆசிரியை திருமதி செல்வநாயகி தெய்வேந்திரமூர்த்தி அழகியலுடன் இணைந்து ஆன்மீகத் தையும் விழுமியத்தையும் புகட்டும் பாலர் பாடல் மலரை வெளியிடுவதையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன்.

சித்திரக்கலை ஆசிரியரான இவரது ஓவியங்கள், பாடல்களை மெருகூட்டுகின்றன. நம் எதிர்கால சந்ததிக்கு இது அரும் பெட்டகமாக அமையும் என நம்புகின்றேன். மணிவிழாக்காண இருக்கும் இவரது சமூகப்பணி தொடர வாழ்த்துகின்றேன்.

**திரு.ச.புண்ணியமூர்த்தி**
**முதல்வர்**
கிளி / முருகானந்தாக் கல்லூரி
முரசுமோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கிளி / முருகானந்தா கல்லூரியின் ஆசிரியை திருமதி செல்வநாயகி தெய்வேந்திர மூர்த்தி அவர்கள் இன்னும் ஒரு சில தினங்களில் ஓய்வு பெற்றுச் செல்லவிருக்கின்ற நிலையில் அவரது படைப்பாற்றலால் உருவான கரும்பு சிறுவர் பாடல் என்ற ஓவியத்துடன் கூடிய நூலிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் நான் பெருமிதமடை கின்றேன்.

ஆசிரியை கிளி / முருகானந்தாக் கல்லூரியில் ஏழு ஆண்டுகளாக ஆசிரியர் பணியை அர்ப்பணிப்புடன் கூடிய பணியாக ஆற்றியுள்ளார். நான் கல்லூரியில் முதல்வராக பணிபுரிந்த காலப்பகுதியில் இரண்டு ஆண்டுகள் என்னுடன் சேவையாற்றியுள்ளார். அவர் எப்போதும் மாணவர்களின் ஒழுக்கம்சார் விழுமியங்களில் அதீத அக்கறை காட்டுபவர் இந் நடத்தை மாற்றத்திற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் வாராவாரம் ஓவியப் போட்டிகளை நடாத்துவார். அத்தோடு நின்று விடாது வெற்றியீட்டிய மாணவர்களின் பெயரைக் காட்சிப் பலகையில் காட்சிப் படுத்துவார். அவர் கை வண்ணத்தில் உருவான ஓவியங்கள் பலவற்றை நான் கண்ணுற்றுள்ளேன். அவை ஒவ்வொன்றும் ஏதோ ஒரு விழுமியத்தையோ பண்பாட்டையோ பிரதிபலிப்ப-தாய் அமைந்திருக்கும்.

எவ்விடயமும் ஓவிய வடிவில் அமையும் போது அது மாணவர் மனதில் ஆழமாகப் பதியும் என்பது ஆசிரியையின் எண்ணப்பாங்கு. ஆசிரியையின் ஓய்வு கல்லூரியை பொறுத்தவரையில் ஒரு வெற்றிடமாகவே அமையும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஆசிரியையால் வெளியிடவிருக்கும் தரம் 3- 5 வரையான மாணவர்களுக்கான “கரும்பு சிறுவர் பாடல்” என்ற ஓவியத்துடன் கூடிய பாடல்கள் அடங்கிய நூல் கரும்பு போன்று மாணவர்களின் மனதில் தித்திக்கும். இந்நூல் தைப்பொங்கல் , நூலகம் , வட்டநிலா போன்ற 23 கருப்பொருட்கள் அடங்கியதாக வெளிவருகின்றது. அவற்றை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்கும் கிட்டியதால் அவை ஒவ்வொன்றினதும் ஓசை நயமும், மொழிநடையும், கருத்தாழமும் என்னைக் கவர்ந்தன. இந்நூல் இக்கல்லூரி உள்ளளவும் அவரின் பெருமையை பறைசாற்றி நிற்கும் என்பதில் ஐயமில்லை. இந்நூல் சிறப்புறவும், ஆசிரியையின் ஓய்வுக்கால பயன்மிக்கதான பணி எப்போதும் கல்லூரிக்குக் கிட்டவேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.தி.வரதன் ( முதல்வர் )**
யா/ யூனியன் கல்லூரி
தெல்லிப்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை



"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற முதுமொழிக் கிணங்க எமது சின்னஞ்சிறு சிறார்களின் மனதிலே நல்லொழுக்க விழுமியப் பண்புகளை ஏற்படுத்துவதும், மேம்படுத்துவதும் ஆசிரியர்களாகிய எங்களதும் பெற்றோர்களி-னதும் கட்டாய கடமையாகும்.

எமது பள்ளிச் சிறார்களின் கற்றலுக்கும், ஒழுக்க விழுமியப் பண்புகளுக்கும் தடையாக பல்வேறு சாதனங்கள் உலா வரும் இக்கால கட்டத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பெறுமதி மிக்க எம் மாணவச் செல்வங்களின் ஒழுக்க விழுமியப்பண்புகளை வளர்த்தெடுக்க வேண்டும். நடு நிலையுடன் கூடிய நற்பிரஜை களை உருவாக்க வேண்டும். தடைகளிலிருந்து மாணவர்கள் தன்னம்பிக்கையுடனும் சுய கட்டுப்பாட்டுடனும் தம்மைத்தாமே காத்துக்கொள்ள வேண்டும் என்பதே இந்நூல் வெளியீட்டின் நோக்கமாகும். இவ்வாறான நல்நோக்குடன் பலரும் பாடுபடும் இவ்வேளையில், இராமருக்கு உதவிய அணில் பிள்ளை போல நானும் என்னால் இயன்ற செயற்பாட்டை வெளிப்படுத்த முனைந்துள்ளேன்.

இந்நூலானது நிச்சயம் மாணவச் செல்வங்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையில் பேருவகை அடைகின்றேன். இப்பாடல் தொகுதி நூலுருப் பெற ஊக்கமளித்து ஆலோசனை வழங்கிய அனைவருக்கும் இப்பாடலை இசையுடன் பாடித்தந்த எமது கல்லூரி மாணவச் செல்வங்களுக்கும் பாடல்களை இசையமைத்து பதிவு செய்து தந்த S.N. ஒலிப்பதிவு கலையகத்தினருக்கும் இந்நூலினை அழகிய முறையில் அச்சிட்டு உதவிய வேழன் பதிப்பகத்தின ருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.

**திருமதி.செ.தெய்வேந்திரமூர்த்தி**
**ஆசிரியர்**
கிளி / முருகானந்தாக் கல்லூரி
முரசுமோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.....

1. நேரம்
2. நிலா
3. நல்ல நண்பன்
4. மரங்கள் நாட்டுவோம்
5. மண்ணிற்கு கேடு
6. பாதையிலே நடக்கையிலே
7. பூந்தோட்டம்
8. செல்லப்பிராணி
9. எங்கள் விருந்தாளி
10. இயற்கை
11. அம்மா
12. கூடாது
13. மலர்கள்
14. குணமா இல்லை எம்மிடம்?
15. ஓட்டப்பந்தயம் வைப்போமா?
16. எந்த இடம், அது எந்த இடம்?
17. பொங்கலோ பொங்கல்
18. விட்டுக்கொடுத்திடலாம்
19. பெரியோரை நீ வணங்கு
20. நூலகம்
21. பேரன் , பேர்த்தி
22. குட்டிப்பாப்பா
23. ஆசிரியர் ( பின்னிணைப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம்



நேரம் போகுதே தம்பி
நேரம் போகுதே
பாடசாலை செல்ல வேண்டும்
நேரம் போகுதே
காலையிலே குளிக்க வேண்டும்
நேரம் போகுதே
கனக்க தூரம் செல்ல வேண்டும்
நேரம் போகுதே

காலைவேளை உணவினை நாம்
உண்ண வேண்டுமே
கடவுளையும் வணங்கி ஆசி
பெறவும் வேண்டுமே
சீருடைகள் சீர் ஆக
அணிய வேண்டுமே
சிரித்தபடி அனைத்தையும் நாம்
செய்ய வேண்டுமே

வீட்டுப் பாடங்கள் எல்லாம்
முடிக்க வேண்டுமே
முடிந்த வரை அம்மாவுக்கும்
உதவ வேண்டுமே
அதிகாலையிலே எழுந்து வேலை
முடிக்க வேண்டுமே
தினமுமிதை செய்து வந்தால்
இன்பம் கொள்ளையே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலா

வட்ட நிலா அந்த
வட்ட நிலா
எட்ட நின்று எம்மை
பார்த்த நிலா
சுட்ட நிலா வடை
சுட்ட நிலா
தொட்ட நிலா வானை
தொட்ட நிலா!

வந்து நிலா அருகில்
வந்து நிலா
தமிழ் அழகினையே கொட்டித்
தந்த நிலா
மறைந்து செல்ல இடம்
தேடும் நிலா
முகில் கூட்டத்திலே முட்டி
மோதும் நிலா!

கட்டி வைக்க உன்னை
ஆசை நிலா
கள்ளத் தனம் ஏனோ
சொல்லு நிலா
சொல்லு நிலா பதில்
சொல்லு நிலா
யாருக்கு யார் நீ
சொந்தம் நிலா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நண்பன்

நல்ல நண்பர் கூட்டத்தை
நாங்கள் சேர்க்க வேண்டுமே
நல்ல நண்பன் யாரென்று
நாளும் தேட வேண்டுமே

இடர்கள் வந்த போதிலும்
ஓடி வந்து உதவுவான்.
கைகள் இரண்டை நீட்டியே
கட்டி அணைத்து வருடுவான்.

குற்றம் செய்ய நினைத்திடில்
தடுத்து வார்த்தை ஆடுவான்.
உரிய இடத்தில் சொல்லியே
என்னைத் திருத்த முயலுவான்.

புள்ளி குறைந்த பாடத்தை
புரியும் படி புகட்டுவான்
போட்டி போடும் வேளையில்
புகழ்ந்து நெஞ்சம் மகிழுவான்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்கள் நாட்டுவோம்



மரங்கள் நாட்டுவோம் நாங்கள்
  மரங்கள் நாட்டுவோம்.
சிறுவர் நாங்கள் கூடியொன்றாய்
  மரங்கள் நாட்டுவோம்.

மனித இனம் வாழுமிந்த மண்ணின்
  வெம்மை தணியவே
மா பலா வாழையென
  மரங்கள் நாட்டுவோம்.



பறவைகளும் பல்லுயிரும் பகிர்ந்து
  உண்டு வாழவே
பசிய நல்ல மரங்களை நாம்
  பணிந்து நாட்டுவோம்.

காடு மேடு கழனியெல்லாம்
  கடுகிமழை பொழியவே
கருணையான செயல் ஈதென்று
  மரங்கள் நாட்டுவோம்.



மண்ணரிப்பை தடுக்கவும் காற்றில்
  சுத்தம் சேர்க்கவும்
மனதுக்கினிமை நிழல் என
  மரங்கள் நாட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணிற்கு கேடு

போகும் இடமெல்லாம்
"பொலித்தீன்" தூவி
போக்கிரியாகாதே அது
பூமிக்கு ஆகாதே.

மண்ணிற்கு கேடு
தருகின்ற குப்பை
தவிர்த்திடு அதனாலே
தரமுயர்த்திடு இதனாலே

"பிளாஸ்ரிக்" போத்தல்
"பொலித்தீன்" பைகள்
பாவனைக்காகாதே நோய்
வந்திடும் அதனாலே

கடல்தனில் வாழும்
உயிரினம் யாவும்
அழிந்திடும் முன்னாலே நீ
செயற்படு அன்பாலே

வருகின்ற நாட்கள்
வளம் பெறவேண்டும்
தடுத்திடு முன்னாலே - வளம்
சேர்ந்திடும் தன்னாலே





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதையிலே நடக்கையிலே

பாதையிலே நடக்கையிலே
பார்த்து வாருங்கள்
வலதுபக்கமாக நீங்கள்
நடந்து வாருங்கள்

வெள்ளைக்கோட்டைக் கடக்கையிலே
பார்த்து வாருங்கள்
மாறிமாறி இருபக்கமும்
பார்த்து வாருங்கள்.

எதிரில்வரும் வாகனத்தை
பார்த்து வாருங்கள்
எப்போதும் எச்சரிக்கை
ஆக வாருங்கள்

கூடவரும் தம்பியையும்
கூட்டி வாருங்கள்
ஒருவர்பின்னே ஒருவராக
ஒதுங்கி வாருங்கள்

பச்சைசிவப்பு மஞ்சல்விளக்கை
அறிந்து வாருங்கள்
பதட்டமின்றி பாதையிலே
நடந்து வாருங்கள்

மேம்பாலம் மேலாக
ஏறி வாருங்கள்
மேன்மையான பொறுமையினை
காட்டி வாருங்கள்

"அம்புலன்சின்" ஒலி கேட்டால்
ஒதுங்கி நில்லுங்கள்
அதுபோனபின்பு அமைதியாக
நடந்து வாருங்கள்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூந்தோட்டம்

எங்கள் வீட்டுப் பூங்காவில்
எல்லாச் செடியும் இருக்கிறது
மல்லிகை முல்லை செவ்வரத்தை
மலர்கள் மலருது அழகாக

ஆடு மாடு நுழையாமல்
வேலி போட்டு வைத்துள்ளோம்
அம்மா தம்பி எல்லோரும்
இணைந்து வேலை செய்கின்றோம்

அலரி தேமா றோசாமலர்கள்
அழகாய் சிரிக்குது எமைப்பார்த்து
விதம்விதமான பூ மரங்கள்
விரும்பி நாட்டி மகிழ்கின்றோம்

மாலை கட்ட எடுக்கின்றோம்
சாமிக்கும் பூ வைக்கின்றோம்
அக்கா தலையில் சூடுகின்றாள்
அழகாய் வீடும் இருக்கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பிராணி

ஆட்டுக் குட்டியே எங்கள்
அழகுக் குட்டியே
செவியிரண்டை ஆட்டி ஆட்டி
துள்ளும் குட்டியே

கறுப்பு நிறத்திலே வந்த
அழகுக் குட்டியே
வெள்ளைப் பொட்டு வைத்துக்கொண்டு
துள்ளும் குட்டியே

அன்னை மடியிலே பால்
குடிக்கும் குட்டியே
அள்ளி உன்னை அணைப்பதற்கு
ஆசை குட்டியே

வாலை உயர்த்தியே துள்ளி
ஓடும் குட்டியே
வந்து என்னை முட்டிமுட்டி
தள்ளும் குட்டியே!





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எங்கள் விருந்தாளி

சின்ன அணில் பிள்ளையேயுன்
செல்லக் குறும்பு தொல்லையே!
அங்கும் இங்கும் தாவியே
அறுத்துக் குரும்பை குடிக்கிறாய்

தினமும் இங்கே வருகிறாய்
கனிகள் தன்னை ருசிக்கின்றாய்
மரத்தில் மறைந்து வருகின்றாய்
மாயக் குறும்பு செய்கின்றாய்.

சின்ன அணில் பிள்ளையே!
உன்னைக் காண வில்லையே!
எந்தன் மனது நோகுதே!
ஏக்கம் என்னை வாட்டுதே!

எங்கள் வீட்டு அழகனே!
எனக்குப் பிடித்த நண்பனே!
உடனே இங்கு வந்திடு
உனது விருந்தை உண்டிடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை

இயற்கையினை நாம் வணங்கி
இதமாக நடந்து கொள்வோம்
இறைவன் தந்த வரமிதனை
என்றும் நாம் போற்றி செய்வோம்

மரம் நாட்டி மழை பெறுவோம்
மழை நீரை சேமிப்போம்
காற்றுக்கும் உயிர் கொடுப்போம்
மண்ணுக்கும் பலம் சேர்ப்போம்

உயிரை எல்லாம் போசிப்போம்
உணவினையே பகிர்ந்து உண்போம்
உதாரணமே நாம் என்போம்
உலகினை நாம் இரட்சிப்போம்

“ஓசோனை” காப்பதற்கு நாம்
ஒன்று ஒன்றாய் சிந்திப்போம்
சிந்தனையை செயற்படுத்த நாம்
சீக்கிரமாய் கை சேர்ப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

அம்மா என்னை அணைக்கின்றாள்
அவளே என்னை வளர்க்கின்றாள்
அதி காலையிலே எழுகின்றாள்
அன்பாய் என்னைப் பார்க்கின்றாள்
பாடம் சொல்லித் தருகின்றாள்
பக்கத்தில் வந்து இருக்கின்றாள்
பசியைப் போக்க சமைக்கின்றாள்
பட்சம் ஆக இருக்கின்றாள்.

வேலைக்கு அவளே செல்கின்றாள்
வீட்டிலும் வேலை செய்கின்றாள்
என்னைக் கவனித்துக் கொள்கின்றாள்
எப்போதும் துணை நிற்கின்றாள்
பாடசாலை போகின்றாள்
என்னைப் பற்றி அறிகின்றாள்
என்தேவை என்ன புரிகின்றாள்
உடனே நிறைவு செய்கின்றாள்.

காய்ச்சல் எனக்கு வந்துவிட்டால்
கண்கள் விழித்துக் காக்கின்றாள்
"சைக்கிள்" வாங்கித் தருகின்றாள்
அவளோ நடந்து செல்கின்றாள்
தன்பிள்ளை நல்லவன் என்றுணர்ந்து
தலையை நிமிர்த்தி நடக்கின்றாள்
ஆடையும் அவளே துவைக்கின்றாள்
அவளே அவளுக்கு நிகராவாள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடாது

அம்மா அப்பா இருவருக்கும் மறைக்கக் கூடாது
எதையும் மறைக்கக் கூடாது
என்னநடந்த போதும் அச்சம் கொள்ளக் கூடாது
அச்சம் கொள்ளக் கூடாது

அறியாத ஆட்கள் உடன் கதைக்கக் கூடாது
எதையும் கதைக்கக் கூடாது
அவர்கள் தரும் பொருட்களையும் வாங்கக் கூடாது
ஆமா வாங்கக் கூடாது

கிட்ட வந்து பேசும் வரை நிற்கக் கூடாது
சும்மா நிற்கக் கூடாது
தொட்டு தொட்டு பேச வந்தால் பொறுக்கக்கூடாது
ஆமா பொறுக்கக் கூடாது

வாகனத்தில் ஏறச் சொன்னால் ஏறக்கூடாது
உடனே ஏறக்கூடாது
நண்பரெல்லாம் போன பின்பு நிற்கக் கூடாது
ஆமா நிற்கக் கூடாது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்கள்

வண்ண வண்ண மலர்கள் இங்கே
மலர்ந்து காட்சியளிக்குது
வந்தோம் இங்கே அழகு செய்வோம்
என்றே சொல்லிநிற்குது.

வேறு வேறு நிறங்கள் கொண்டும்
வேற்றுமைகள் இல்லையே
வாழும் மனித கூட்டம் இதனை
பெற்றால் தொல்லையில்லையே.

மென்மை ஆன இதழ்கள் கொண்டு
மேன்மை பெற்ற போதிலும்
இறைவன் அடி வீழ்ந்து எங்கள்
ஏக்கமெல்லாம் போக்குது.

அழகழகாய் மலர்கள் எல்லாம்
மலர்ந்து மணம் வீசுது
அளிகளெல்லாம் மதுவை உண்டு
ஆனந்தம் கொண்டாடுது

ஓர் நாளில் வாழும் மலர்
உணவு தானம் செய்யுதே
உலகில்வாழும் நாங்களிங்கே என்ன
தானம் செய்கின்றோம்?

மலர்கள் எல்லாம் மலர்ந்து மலர்ந்து
மண்ணுக்கு இரை ஆகுது
வளரும் பயிர் அத்தனைக்கும்
வளமாயது ஆகுது

வாய் திறந்து உரைக்கவில்லை
மௌனம் வார்த்தையாகுது.
மண்ணில் வாழும் வாழ்வு இது
என்றே ஏற்கச்சொல்லுது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணமா இல்லை எம்மிடம்?

குறைகள் இல்லை யாரிடம்?
குணமா இல்லை எம்மிடம்
அன்னை தந்தை ஆசானை
வணங்க வேண்டும் தினந்தினம்
ஆசி பெற்று வாழ்க்கையினை
வாழ வேண்டும் அனுதினம்
காசு இல்லை நிரந்தரம்
கல்விதானே தரம் தரம்.

எண்ணும் எழுத்தும் கண்ணாகும்
முன்னோர் சொன்ன மொழியாகும்
ஒழுக்கம் எங்கள் உயிராகும்
உணர்ந்திடல் எங்கள் கடனாகும்
சுத்தம் பேணல் முறையாகும்
சுகமே அதற்கு பரிசாகும்
கூடி வாழ்வது பலமாகும்
குறைகளை மறப்பது சிறப்பாகும்.

விட்டுக் கொடுப்பது சுகமாகும்
விரும்பிக் கற்பது நலமாகும்
ஆபத்தில் உதவுதல் பரிவாகும் -அதை
அன்றே மறப்பது இயல்பாகும்
அன்புடன் நடத்தல் அறமாகும்
அமைதி காத்தல் உயர்வாகும்
இனங்களை மதித்தல் பண்பாகும்
இரங்குதல் என்றும் இனிதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டப்பந்தயம் வைப்போமா?

ஓட்டப் பந்தயம் வைப்போமா
ஒருவரை முந்திக்கொள்வோமா?
காலையில் எழுந்து செல்வோமா
கடின வேலைகள் செய்வோமா?
மாலையில் ஒன்றாய் சேர்வோமா
மகிழ்ந்து பந்தை அடிப்போமா?
கிட்டிப்புள்ளும் பம்பரமும் விட்டால்
என்ன தப்பாமா?

பயிற்சிகள் ஒழுங்காய் செய்வோமா?
பலத்தையெம்மிடம் வளர்ப்போமா?
அணியாய் ஒன்று திரள்வோமா
அடுத்த போட்டிக்கு செல்வோமா?
வேகம் விவேகம் இரண்டினையும்
கொண்டே வெற்றி பெறுவோமா?
வெற்றி தோல்வி இரண்டினையும்
சமமாயெடுத்து கொள்வோமா?

சத்தாய் உணவினை உண்போமா
சக்தியை தேடிப் பெறுவோமா?
சுத்தம் பேணிக் கொள்வோமா
சுகத்தை நாளும் அடைவோமா?
போட்டிகள் பலவும் வைப்போமா
பொழுதை நன்றாய்க் களிப்போமா?
சக்தியை ஒன்றாய் திரட்டியங்கு
சாதனை படைக்க முயல்வோமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த இடம் ? அது எந்த இடம்?

எந்த இடம்? அது எந்த இடம்?
எந்த இடம்? அது எந்த இடம்?
எந்த இடம்? அது எந்த இடம்?
எந்த இடம்? அது எந்த இடம்?


அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி
அனைவரும் கல்வி கற்ற இடம்
ஒழுக்கம் நேர்மை உண்மை இரக்கம்
எல்லாம் கற்றது அந்த இடம்!

அதிபர் மடியில் அழகாய் அமர்ந்து
“அ“ சொன்னது அந்த இடம்
கிளித்தட்டு மறித்து குளங்கரை ஆடி
சறுக்கி விழுந்தது அந்த இடம்!

அம்மா தந்த அப்பம் தோசை
அனைவரும் உண்டு மகிழ்ந்த இடம்
“அ“ படிக்க மண்ணைத் தேய்த்து
முட்டி போட்டு நின்ற இடம்!

இல்லப் போட்டியில் இடக்குப்பேச்சில்
தடக்கி விழுந்தது அந்த இடம்
வாத்தியார் மடியில் வாகாய் அமர்ந்து
வீட்டுக் கதைகள் சொன்ன இடம்!

“பாட்டி வடையினை சுட்ட கதை”
நடிக்கப் பழகிக் கொண்ட இடம்
எண்ணும் எழுத்தும் கற்ற இடம்
எல்லோருக்கும் சொந்த இடம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கலோ பொங்கல்

புத்தாண்டு பிறந்ததம்மா!
  பொங்கலோ பொங்கல்
புதுவாழ்வு மலர்ந்ததம்மா
  பொங்கலோ பொங்கல்
புதியநல்ல சிந்தனையில்
  பொங்கலோ பொங்கல்
புரட்சிதர வேண்டுமம்மா
  பொங்கலோ பொங்கல்!

நல்வாழ்வு வாழ்வதற்கு
  பொங்கலோ பொங்கல்
நாமிணைய வேண்டுமம்மா
  பொங்கலோ பொங்கல்!
அனைவருமே இணைந்துவர
  பொங்கலோ பொங்கல்
அகங்குளிர்ந்து மலருமம்மா
  பொங்கலோ பொங்கல்!

பல்லினமும் இணையவென்று
  பொங்கலோ பொங்கல்
பரிந்துணர்ந்து பொங்கலிட்டோம்
  பொங்கலோ பொங்கல்
எல்லோருக்கும் இனிமைதரும்
  பொங்கலோ பொங்கல்
எப்போதும் சுகம்தானே
  பொங்கலோ பொங்கல்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டுக் கொடுத்திடலாம்





விட்டுக் கொடுத்திடலாம் நண்பா
விட்டுக் கொடுத்திடலாம்
விட்டுக் கொடுத்திடலாம் நண்பா
விட்டுக் கொடுத்திடலாம்

சுற்றத்தார் அன்பைப்பெற நண்பா
விட்டுக் கொடுத்திடலாம்- நம்
சுட்டித்தனத்தையன்பாய் நண்பா
விட்டுக் கொடுத்திடலாம்

கல்வியில் முன்னேற நண்பா
விட்டுக்கொடுத்திடலாம்
சோம்பேறித் தன்மையினை நண்பா
விட்டுக் கொடுத்திடலாம்

மனனம் செய்வதற்காய் நண்பா
விட்டுக் கொடுத்திடலாம்
அதிகாலையுறக்கத்தை நண்பா
விட்டுக் கொடுத்திடலாம்.

கட்டுக்கடங்காத மனதை
கட்டிநாம் வைத்திடவே
விட்டுக்கொடுத்திடலாம் நம்
எண்ணக்கழிவுகளை......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியோரை நீ வணங்கு

பெரியோரை நீ வணங்கு - அவர்
அறிவுரைக்கு தலை வணங்கு
வழிகாட்டலுக்கும் நீ இணங்கு - பலன்
தேடி வரும் பலமடங்கு
சத்தியத்தில் நீ துலங்கு - நல்ல
பாதையிலே நீ அடங்கு
ஆசிகளை கோடி பெற்று - நல்ல
காரியங்கள் நீ தொடங்கு

பெற்றவர்க்கு நீ அருமருந்து -உன்
உற்ற செயல் பெருவிருந்து!
தாயாரின் சொல் கேட்டமைந்து - நீ
வாழ்வாயே தரம் உயர்ந்து
தந்தை சொல்லை கேட்டுணர்ந்து
தகைமை பெறல் வேண்டுமிங்கு
பெற்ற வரம் இது என்று
நிற்பாயே - தலை நிமிர்ந்து

ஆசானை பணிந்து கொண்டு - நீ
கற்றதனால் ஒளி விளங்கு!
மனங்கள் எல்லாம் விழிக்க என்று
மகிழ்ந்து செயல் ஆற்று இங்கு
உலகுக்கு ஒளி என்று உன்னை
நீ காட்டு இங்கு
இதமான உன் ஆற்றல் இங்கு
இசைவாகும் எனத் துலங்கு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகம்

நூலகம் சென்றிடலாம் - நல்ல
நூல்களைத் தேடிடலாம்
சீரிய நண்பரென்றே நல்ல
நூல்களைக் கொண்டிடலாம்

பல்லாயிரம் விடயம் - அங்கே
தேடியே பெற்றிடலாம்
பாங்குடன் அங்கமர்ந்து - நல்ல
பண்பினைக் கற்றிடலாம்

நாளும் நடப்பவற்றை - அங்கே
நன்றாய் அறிந்திடலாம்
நற்பல ஆக்கங்களை - இன்றே
நாமும் படைத்திடலாம்

வீணாகும் பொழுதுகளை - அங்கே
விரும்பிக் களித்திடலாம்
வித்தகர் நூல்களினால் - நாமே
விண்ணையும் தொட்டிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரன் பேர்த்தி

பேரன் பேர்த்தி பெருமையை
போற்றிப் பேச வாருங்கள்
பெற்ற தாய் தந்தையை
பேணி வளர்த்த தெய்வங்கள்

நாங்கள் உருவானதால்
நன்றே மகிழ்வு கொண்டவர்
எண்ணெய் தேய்த்து கால்கையை
இதமாய் பிடித்து விட்டவர்

கல்வி கற்கும் போதிலே
கைகள் தட்டி மகிழுவார்
குட்டிக் கதைகள் சொல்லியே
கூடி ஒன்றாய் பாடுவார்

நொடிகள் எல்லாம் சொல்லுவார்
நொடிக்கு நொடி தேடுவார்
படிக்கும் படி கூறுவார்
பண்பு கொண்டே பழகுவார்

முதுமை வந்து சேர்கையில்
நோய்கள் வந்து வீழ்கையில்
முதியோர் இல்லம் தன்னிலே
சேர்க்கலாமோ சொல்லுங்கள்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டிப்பாப்பா

எங்கள் கூட்டுக் குடும்பத்தில்
குட்டிப்பாப்பா வந்து விட்டாள்
குறும்பாய் என்னுடன் விளையாட
கொஞ்சும் பாப்பா வந்து விட்டாள்

ஏணை கட்டி ஆட்டுகின்றோம்
ஏந்திச் செல்லம் கொடுக்கின்றோம்
பரிவுடன் அவளைப் பார்க்கின்றோம்
பஞ்சு போல இருக்கின்றாள்

அம்மா தூக்கி அணைக்கின்றாள்
அப்பா முத்தம் இடுகின்றார்
நானும் பார்த்துச் சிரிக்கின்றேன்
நன்றாய் கண்ணைச் சிமிட்டுகின்றாள்

சின்னப் பாப்பா சிரித்தாலும்
செல்லப்பாப்பா அழுதாலும்
வான வில்லைப் போலங்கே
வடிவாய் எனக்குத் தெரிகின்றாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்

வரவேண்டும் வரவேண்டும் வரவேண்டுமே – வரம்
தர வேண்டும் தரவேண்டும் தர வேண்டுமே

அஞ்ஞான இருளகல வரவேண்டுமே
வழிகாட்டி வழிகாட்டித் தர வேண்டுமே
அருள் தரவேண்டுமே

சொல்லெல்லாம் செயலாக வடிவமைத்தீர் – உங்கள்
பெயர் போற்ற எமை, மாற்றி உயர்வும் பெற்றீர்
கட்டுப்பாடெல்லாம் கண்ணசைவில் நடத்தி வைத்தீர்
எட்டுத்திசை போற்ற எமையாக்கி நிறைவும் கொண்டீர் (வர)

கல்வி நிலை உயர, கற்றல் தரம் உயர
கண்கள் பனிக்க எமை வாழ்த்திடுவீர்
எங்கள் நிலை உயர, என்றும் உயர்வு பெற
இன்றும் எமை வாழ்த்தி உயர்ந்திடுவீர் ( வர )

கற்றதெல்லாம் பயனுறவே வழி சமைத்தீர் – உங்கள்
கருணையினால் எமை மாற்றி இசையும் பெற்றீர்
அன்பாலே வசமாக்கும் வித்தை கொண்டீர்
அடி பணிந்து வணங்குகின்றோம் வரமே தந்தீர் ( வர)

எங்கள் நிலை அறிந்து, எதற்கும் தீர்வு தந்து
எம்மை வழிநடத்தி இதமும் கொண்டீர்
சங்கத் தமிழும் தந்து சக்தி என நிமிர்ந்து
சந்தத் தமிழில் எமை வாழ்த்திடுவீர் ( வர )





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியர் பற்றி....

"கரும்பு" சிறுவர் பாடல் நூலாசிரியர் திருமதி செல்வநாயகி தெய்வேந்திரமூர்த்தி பற்றி சில வார்த்தைகள் கூறுவதில் மகிழ்வடைகின்றேன், பரந்தன் கிராமத்தில் முன்பள்ளி ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர் 1986 இல் பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் முறைசாராக் கல்வி, ஆடை வழவமைப்பு தொடர்பாக பயிற்சி அளிப்பதற்கு பொருத்தமான ஆசிரியரை நியமிப்பதற்கு முயற்சித்தபோது இவரது பெயரை பெற்றோர் சிபார்சு செய்தனர்.

முறைசாராக் கல்வி நெறியின் ஆசிரியராக நியமனம் பெற்ற ஆசிரியை திருமதி.தெய்வேந்திரமூர்த்தி தனது திறமையால் பரந்தன் இ.ம.வி இன் முறைசாராக்கல்வி செயற்பாடுகளை சிறப்புடன் முன்னெடுத்தார். இதனால் முறைசாராக் கல்வி செயற்பாடுகளில் பரந்தன் இந்து ம.வி, திணைக்கள மட்டத்தில் சிறப்பான பெயரை பெற்றிருந்தது. இவரிடம் இயல்பாக அமையப் பெற்றிருந்த அழகியல் உணர்வு எமது வித்தியாலயம், இச்செயற்பாட்டில் சிறப்பிடம் பெறுவதற்கு காலாயிற்று. 1990 இல் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தபோது எனது வேண்டுகோளை ஏற்று விண்ணப்பத்தை அனுப்பி வைத்தார்.

முறைசாராக் கல்விநெறியின் ஆசிரியராக இருந்தமையால் நேர்முகத் தேர்வில் சிறப்புப் புள்ளிகளைப்பெற்று பயிலுநர் ஆசிரியராக நியமனம் பெற்றார்.

கிளி /புனித அந்தோனியார் வித்தியாலயத்திலும், பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலும் சித்திர பாட ஆசிரியராகக் கடமையாற்றியதுடன் தொலைக் கல்வி ஆசிரியராகப் பயிற்சி பெற்று தனது வாண்மையை உயர்த்தி கற்பித்தல் செயற்பாட்டிலும் துலங்கல் பெற்றார். கிளிநொச்சி முல்லைத்தீவு, வவுனியா கல்வி வலயங்களில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கல்விச் செயற்பாட்டில் மட்டுமன்றி கல்வி இணைச் செயற்பாட்டிலும் ஆர்வம் மிக்கவராக இருந்தமையால் தரம் 1,2,3, 4, 5, மாணவர்களுக்கான "கரும்பு" சிறுவர் பாடல்களை ஆக்கியுள்ளார். இலகுவான, இனிமையான தமிழ் நடையில் சிறுவர் பாடலுடன் மட்டும் நின்றுவிடாது ஆடி மகிழ்ச்சி கொள்ளவும் தூண்டும் வகையில் இவரது இறுவட்டு அமைந்தது சிறப்பம்சமாகும்.

முப்பது ஆண்டுகள் ஆசிரிய சேவையை நிறைவு செய்கின்ற இவர் அரச சேவையிலிருந்து பணி ஓய்வு பெறுகின்ற வேளையில் "கரும்பு" சிறுவர் பாடல்களை வெளியிடுவது பாராட்டுக்குரியது.இவ் வேளையில் இவரை வாழ்த்தி இவரது பணி ஓய்வுகாலத்தில் இன்னும் பல ஆக்கங்களை வெளியிட எல்லாம் வல்ல குமரபுரம் திருமுருகன் திருவருளை வணங்கி வேண்டுகின்றேன்.

திரு.க.ம.பத்மநாதன்
பிரதிக் கல்விப்பணிப்பாளர்
( ஓய்வுநிலை)
பரந்தன்.



வேழன் பதிப்பகம்,கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org